## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

மாநிலத்தில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும், அவற்றை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசால் 16.03.1970 அன்று தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி சிறுவனம் (சிட்கோ) நிறுவப்பட்டது.

சிட்கோ நிறுவனம் கீழ்க்காணும் நோக்கத்துடன் தனது இலக்கை அடைய முனைந்து செயல்பட்டு வருகிறது.

''குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனை உயர்த்த அவற்றுடன் நிலையான ஒருங்கிணைப்பு''.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில் நுட்பம், தொழில் துவங்க தேவையான மூலப்பொருட்கள், சிறந்த நிர்வாகம் மற்றும் உற்பத்தி முறைகள், மூலதனம் மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து புதிய தொழிற் பேட்டைகள் அமைக்கவும், தொழிற்பேட்டைகளில் சமூக உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், தொழில் குழுமங்கள் மற்றும் பொது வசதி மையங்களை உருவாக்கவும் சிட்கோ நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது சிட்கோ, அரசால் நிறுவப்பட்ட 35 தொழிற்பேட்டைகளையும், மற்றும் தனது 59 தொழிற்பேட்டைகளையும் பராமரித்து வருகிறது. ( இணைப்பு – அ)

### 3.1 புதிதாக தொழிற்பேட்டைகளை அமைக்க நிலங்களை கண்டறிவதற்கான வழிமுறைகள்

ஒரு மாவட்டத்தின் பொறுப்பிலுள்ள கிளை அலுவலகத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை துவங்குவதற்கான தேவை குறித்த ஆய்வினை சிட்கோ நிறுவனம் மேற்கொள்கிறது.

கிளை மேலாளரது அறிக்கை கிடைக்கப்பெற்ற உடன் சிட்கோவின் உயர் அலுவலர்கள் சம்மந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுடன், கண்டறியப்பட்ட நிலம் புதிய தொழிற்பேட்டை துவங்க தகுதிவாய்ந்த நிலம்தானா என்பதை அறிய கூட்டுபுலத்தணிக்கை மேற்கொள்வார்கள். பொருத்தம் குறித்த திருப்தி அடைந்தவுடன் மேற்படி நிலங்களை சிட்கோவிற்கு நில உரிமை மாற்றம் / நில எடுப்பு செய்வதற்காக நில வரைபடம் மற்றும் திட்ட அட்டவணை ஆகியவை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் தேர்வு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களின் நில உரிமை மாற்ற முன்மொழிவுகளை அரசுக்கு நில நிர்வாக ஆணையர் மூலம் அனுப்புவார். தேர்வு

செய்யப்பட்ட நிலம் தனியார் பட்டா நிலமாக இருந்தால் நேரடி பேச்சு வார்த்தை மூலமாகவோ அல்லது தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997ன் கீழாகவோ நிலம் கையகப்படுத்த நிர்வாக அனுமதி கோரப்படும். அரசு ஆணையிட்ட உடன், சிட்கோ நிலமதிப்பை செலுத்தி நிலங்களை கையகப்படுத்தும்.

தேர்வு செய்யப்பட்ட நிலங்கள் தனியார் பட்டா நிலங்களாக இருப்பின் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற உடன் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு நேரடி பேச்சு வார்த்தை மூலம் நில எடுப்பு செய்ய நில உரிமையாளர்களிடம் நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்வது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தும். மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு நிர்ணயம் செய்த நிலமதிப்பினை நில உரிமையாளர்கள் ஏற்றுக் கொள்ளாதபட்சத்தில் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997ன் கீழ் நில எடுப்பு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்யலாம்.

மேற்படி நிலஎடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுற்ற பின் நிலங்களுக்கான நில மதிப்பினை சிட்கோ செலுத்தி நிலங்களை கையகப்படுத்தும்.

**3.2 கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் புதிய தொழிற் பேட்டைகள் அமைப்பதற்கான வழிமுறைகள்**

சிட்கோ நிறுவனத்தால் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டபின் அவ்விடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்.

இதற்கான மேம்பாட்டுப் பணிகள் சிட்கோ நிறுவனத்தின் சொந்த நிதியின் மூலமாகவோ அல்லது இந்திய அரசின் குறு,சிறு நிறுவனங்கள் – குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியின் மூலமாகவோ மேற்கொள்ளப்படும்.

மேம்பாட்டு பணிகளானது, சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் வசதி அமைத்தல், சிறு பாலங்கள், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், கழிவுநீர் வடிகால் வசதி ஏற்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், மரங்கள் நடுதல் மற்றும் தேவையான வசதிகளை உருவாக்குதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகளை உள்ளடக்கியது ஆகும். மேலும் சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் / நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்குநரகத்தின் விதிமுறைகளுக்கேற்றபடி தொழிற் பேட்டையின் வரைபடம் சிட்கோ கட்டுமானப் பிரிவால் தயாரிக்கப்பட்டு சென்னை மாநகர வளர்ச்சி குழுமம் / நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்குநகரத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டு மற்றும் புதுப்பிப்பு பணிகள், உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல் போன்ற பணிகளையும் சிட்கோ எடுத்துச் செய்கிறது.

### 3.3 தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டு நெறிமுறைகள்

காலியாக உள்ள தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒதுக்கீடு வெளிப்படையான முறையில் செய்யப்படும். தகுதியான விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத் துறை ஆணையரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவால் நேர்காணல் செய்யப்பட்டு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். குலுக்கல் முறையில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

சிட்கோ நிறுவனம், தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப 5 சென்ட் முதல் 100 சென்ட் (1.00 ஏக்கர்) மற்றும் அதற்கு மேலான அளவுள்ள தொழில்மனைகளை உருவாக்கி ''முழு கிரைய விலை விற்பனை'' அல்லது ''தவணை முறை விற்பனை'' மூலம் அவ்விடத்தில் நிலவும் தேவைக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்கிறது.

**31.01.2009** ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7–ன்படி புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பேட்டையில் விற்பனைக்கு உள்ள மொத்த நிலப் பகுதியில் 30 விழுக்காடு குறுந்தொழில்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

கீழ்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

1) மகளிர் தொழில் முனைவோர் –30%
2) முன்னாள் இராணுவத்தினர் –10%
3) பட்டியல் இனத்தினர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் –10%

மேற்படி இனங்களில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொழில்மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**29.10.2012** ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை எண் 49 ன்படி, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு

திட்டத்தின் கீழ் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் மனுசெய்தால், சிட்கோ தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில் முன்னுரிமை அளித்து ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.4 தொழிற்பேட்டைகள் அமைத்தல்

2011–12 மற்றும் 2012–13ல் 15 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டதில், ராசாத்தவலசு (திருப்பூர் மாவட்டம்) மற்றும் வெண்மணியாத்தூர் (விழுப்புரம் மாவட்டம்) ஆகிய இரண்டு இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 13 இடங்களில் தொழிற்பேட்டைகள் துவங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விபரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | அமைவிடம் | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) | தற்போயை நிலவரம் |
|---|---|---|---|---|
| 1 | குருக்கள்பட்டி | திருநெல்வேலி | 68.77 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | வாணியம்பாடி | வேலூர் | 7.08 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | பிடாநேரி | தூத்துக்குடி | 108.23 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | மாத்தூர் | புதுக்கோட்டை | 19.92 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | பாளையப்பட்டி | தஞ்சாவூர் | 103.03 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | விருதுநகர் (நகர்புறம்) | விருதுநகர் | 37.54 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | மரிக்குண்டு | தேனி | 79.43 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8 | மின்னூர் | வேலூர் | 10.00 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 9 | பட்டணம் மற்றும் வெண்மணி– யாத்தூர் | விழுப்புரம் | 60.55 | நிலம் கையகப் படுத்தப்பட்டு பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 10 | ஏ. சாத்தனூர் | விழுப்புரம் | 219.52 | நில உரிமை மாற்றம் நடவடிக்கையில் உள்ளது. |
| 11 | பொன்னாக்குடி | திருநெல்வேலி | 82.18 | நில உரிமை மாற்றம் நடவடிக்கையில் உள்ளது. |
| 12 | செங்கரை | திருவள்ளூர் | 36.53 | நில உரிமை மாற்றம் நடவடிக்கையில் உள்ளது. |
| 13 | ஆசனூர் ( பகுதி 2) | விழுப்புரம் | 105.50 | நில உரிமை மாற்றம் நடவடிக்கையில் உள்ளது. |
| **மொத்தம்** | | | 938.28 | |

எதிர்வரும் காலங்களில் மேற்கூறிய இடங்களைத் தவிர மொத்தம் 1611 ஏக்கர் நிலப்பரப்பில் 22 இடங்களில், புதிய தொழிற்பேட்டைகளை தொடங்கும் பொருட்டு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

### 3.5 மகளிர் தொழிற்பேட்டைகள்

மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முக்கியத் திட்டங்களில் ஒன்றாக, மகளிர் அதிகாரம் பெறும் வகையில் 5 இடங்களில் மகளிருக்கென புதிய தொழிற்பேட்டைகள் துவங்க முடிவு செய்யப்பட்டது. இது இந்திய அளவில் முதல் முயற்சியாகும். அதன்படி கீழ்க்கண்டவாறு 5 புதிய மகளிர் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | தொடங்கப் பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) | மேம்படுத்தப் பட்ட தொழில் மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில், திருவள்ளூர் மாவட்டம் | 2001 | 225.80 | 785 |
| 2 | வாழவந்தான்கோட்டை திருச்சி மாவட்டம் | 2003 | 51.70 | 110 |
| 3 | கருப்பூர், சேலம் மாவட்டம் | 2004 | 51.74 | 154 |
| 4 | கப்பலூார், மதுரை மாவட்டம் | 2008 | 18.45 | 70 |
| 5 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2002 | 10.75 | 76 |
| | மொத்தம் | | 358.44 | 1195 |

### 3.6 குறுந்தொழில் பிரிவிற்கான தொழிற்கூடங்கள்

1980ஆம் ஆண்டு, சிட்கோ நிறுவனம், சிட்கோ மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் கூட்டு திட்டத்தின் (SIDCO –TIIC Consortium) மூலம் 105 இடங்களில், 1919 குறுந்தொழில் கூடங்களை குறுந்தொழில் முனைவோரின் பயன் பாட்டிற்காக கட்டியுள்ளது. மேற்கூறியவற்றில் 25 இடங்கள் நடைமுறையில் உள்ள அரசு தொழிற்பேட்டைகளிலும், மீதமுள்ள 80 இடங்கள் தொழிற்பேட்டைகளுக்கு வெளியே தனியார் மற்றும் அரசிடமிருந்து பெறப்பட்ட நிலங்களிலும் இயங்கி வருகின்றன.

### 3.7 புதிய மற்றும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

தொழில் துறை கட்டமைப்புகளும் மற்றும் அத்தியாவாசிய பயன்பாடுகளும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மிகவும் அவசியம். பொதுவான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி,

தெருவிளக்கு, சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி போன்றவை தவிர குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மேலும் சில கட்டமைப்பு வசதிகளான கழிவு நீர் சுத்திகரிப்பு, பரிசோதனை மற்றும் ஆய்வுக்கூட வசதிகள் போன்றவற்றை குழும அடிப்படையில் அமைத்திட வேண்டும். குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கென துவக்கப்படும் தொழிற்பேட்டைகளில் பொது வசதிகள் மற்றும் பயன்பாடுகள் ஏற்படுத்தப்படுவதை சிட்கோ உறுதி செய்ய வேண்டும் என தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும், நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் வசதிகளை மேம்படுத்திடவும், மைய மற்றும் மாநில அரசுகள் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு–MSE-CDP), தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (IIUS), ஏற்றுமதி மற்றும் அதைச் சார்ந்த செயல்பாடுகளுக்கான மாநிலங்களுக்கு உதவும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (ASIDE) மற்றும் தமிழ்நாடு அரசின் பகுதி–II திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்கின்றன.

### 3.7.1 குறு,சிறு தொழில் நிறுவனங்கள்– குழும வளர்ச்சித்திட்டம் (MSE-CDP)

இத்திட்டத்திற்கென, மைய அரசிடமிருந்து கீழ்கண்டவாறு நிதி உதவிகள் பெறப்படுகின்றன.

- ❖ குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு)
- ❖ குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்)

**(1) குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டத்தின் (MSE-CDP) கீழ் உட்கட்டமைப்பு மேம்பாடு**

புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, இத்திட்டத்தின் கீழ் மைய அரசு மொத்த திட்ட மதிப்பில் 60 விழுக்காடு (ரூபாய் 6 கோடி உச்ச வரம்புக்கு உட்பட்டு) மானியமாக வழங்குகிறது. 2011–12–ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ், மைய அரசு ரூபாய் 4,074.12 இலட்சங்கள் திட்ட மதிப்பில் 12 புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 12 திட்டங்களில் கீழ்க்கண்ட 10 திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசு மானியம் |
|---|---|---|---|
| 1 | உறங்கான்பட்டி,<br>மதுரை மாவட்டம் | 444.00 | 151.63 |
| 2 | திருமுடிவாக்கம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் | 560.00 | 200.00 |
| 3 | திருமுல்லைவாயில்,<br>திருவள்ளூர் மாவட்டம் | 475.00 | 159.99 |
| 4 | விச்சூர்,<br>திருவள்ளூர் மாவட்டம் | 200.00 | 70.36 |
| 5 | வாழவந்தான்கோட்டை,<br>திருச்சி மாவட்டம் | 615.00 | 118.70 |
| 6 | கருப்பூர்,<br>சேலம் மாவட்டம் | 213.00 | 63.59 |
| 7 | எலம்பலூர்,<br>பெரம்பலூர் மாவட்டம் | 146.00 | 87.60 |
| 8 | கடகத்தூர்,<br>தர்மபுரி மாவட்டம் | 40.00 | 24.00 |
| 9 | ஆசனூர்,<br>விழுப்பும் மாவட்டம் | 395.00 | 237.00 |
| 10 | அரக்கோணம்,<br>வேலூர் மாவட்டம் | 220.00 | 132.00 |
| | மொத்தம் | 3308.00 | 1244.87 |

கீழ்க்கண்ட மீதமுள்ள இரு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் |
|---|---|---|---|
| 1 | போலுப்பள்ளி,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் | 411.00 | 246.60 |
| 2 | காரைக்குடி,<br>சிவகங்கை மாவட்டம் | 355.12 | 213.00 |
| | மொத்தம் | 766.12 | 459.60 |

மேலும், ரூபாய் **2,389.15** இலட்சங்கள் திட்ட மதிப்பில் நடைமுறையில் உள்ள **12** தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த **12** தொழிற்பேட்டைகளில், பின்வரும் **7** தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிவடைந்து விட்டன

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | ஒசூர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் | 59.86 | 23.94 | 23.94 |
| 2 | குறிச்சி,<br>கோயம்புத்தூர் மாவட்டம் | 152.14 | 34.96 | 60.85 |
| 3 | கப்பலூர்,<br>மதுரை மாவட்டம் | 187.50 | 44.1 | 75.00 |
| 4 | விருதுநகர்,<br>விருதுநகர் மாவட்டம் | 34.95 | 13.52 | 13.98 |
| 5 | முகுந்தராயபுரம்<br>வேலூர் மாவட்டம் | 133.45 | 52.65 | 53.38 |
| 6 | ஊட்டி,<br>நீலகிரி மாவட்டம் | 14.00 | 5.58 | 5.60 |
| 7 | கணபதிபாளையம்,<br>திருப்பூர் மாவட்டம் | 45.82 | 27.49 | 13.75 |
| | மொத்தம் | 627.72 | 202.24 | 246.50 |

மீதமுள்ள 5 தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | ஆலத்தூர்,<br>காஞ்சிபுரம் மாவட்டம் | 444.96 | 266.98 | 133.49 |
| 2 | காக்களூர்,<br>திருவள்ளூர் மாவட்டம் | 423.33 | 254.00 | 127.00 |
| 3 | கோவில்பட்டி,<br>தூத்துக்குடி மாவட்டம் | 202.00 | 121.20 | 60.60 |
| 4 | ஆத்தூர்,<br>கரூர் மாவட்டம் | 397.38 | 238.43 | 119.21 |
| 5 | மேட்டூர்,<br>சேலம் மாவட்டம் | 293.76 | 176.25 | 88.13 |
| | மொத்தம் | 1761.43 | 1056.86 | 528.43 |

2012–13–ஆம் ஆண்டில், சிட்கோ 4 புதிய தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறையில் உள்ள ஒரு தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை பின் வருமாறு மேற்கொண்டுள்ளது:

**2012–13 ஆம் ஆண்டில் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பை உருவாக்குதல்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | அமைவிடம் | திட்ட மதிப்பு | மத்திய அரசின் மானியம் | சிட்கோ பங்கு | நிலவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பாளையபட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 499.00 | 299.40 | 199.60 | திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது |
| 2 | வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் | 56.64 | 33.98 | 22.66 | மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 3 | மாத்தூர் (புதியது), புதுக்கோட்டை மாவட்டம் | 235.00 | 141.00 | 94.00 | மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 4 | விருதுநகர் (நகர்ப்புறம்), விருதுநகர் மாவட்டம் | 319.00 | 191.00 | 128.00 | மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுதிட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| | மொத்தம் | 1109.64 | 665.38 | 444.26 | |

**2012–13 ஆம் ஆண்டில் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் :**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொழிற் பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளி களின் பங்களிப்பு | நிலவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மலுமிச்சம் பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் | 200.00 | 113.25 | 60.00 | 26.75 | மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு ஆணை எதிர்பார்க்கப் படு கிறது. |

2013–14 ஆம் ஆண்டில் சிட்கோ 4 புதிய தொழிற்பேடைகளிள் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் மற்றும் நடைமுறையில் உள்ள 2 தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உத்தேசித்துள்ளது. அவை பின்வருமாறு:

**புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | அமைவிடம் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | சிட்கோ பங்கு | நிலவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பிடாநேரி, (தூத்துக்குடி மாவட்டம்) | 447.95 | 268.77 | 179.18 | பிரேரணை மைய அரசுக்கு அனுப்பப்பட்டு ஆணை எதிர்பார்க்கப் படுகிறது. |
| 2 | மரிக்குண்டு, ( தேனி மாவட்டம்) | 720.00 | 432.00 | 288.00 | நிலம் கையகப் படுத்தப்பட்டு வரைபடம் தயாரிக்கப் பட்டு வருகிறது. |
| 3 | குருக்கள்பட்டி, (திருநெல்வேலி மாவட்டம்) | 890.00 | 534.00 | 356.00 | நிலம் கையகப் படுத்தப்பட்டு வரைபடம் தயாரிக்கப் பட்டு வருகிறது. |
| 4 | பட்டணம், (விழுப்புரம் மாவட்டம்) | 610.00 | 366.00 | 244.00 | நிலம் கையகப் படுத்தப்பட்டு வரைபடம் தயாரிக்கப் பட்டு வருகிறது. |
| | மொத்தம் | 2667.95 | 1600.77 | 1067.18 | |

**நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்**

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எ ண் | தொழிற் பேட்டைகளின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளி களின் பங்களிப்பு | நிலவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 432.00 | 259.20 | 129.60 | 43.20 | திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது |
| 2 | திண்டுக்கல், (திண்டுக்கல் மாவட்டம்) | 200.00 | 120.00 | 60.00 | 20.00 | திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு வருகிறது. |
| | மொத்தம் | 632.00 | 379.20 | 189.60 | 63.20 | |

**(2) குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித்திட்டத்தின் [ MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்**

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டமானது (MSE-CDP) தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்திசெய்வதற்காக, பூகோள பரப்பில் தொகுப்பாக அமைந்துள்ள குழுமங்களை உருவாக்கி, குறு, சிறு தொழில் நிறுவனங்களின் ஆதாரங்களை பெருக்குவதற்கும் நிதிவசதிகளைப் பெருக்குவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்பைப் பெருக்குவதற்கும் உதவி செய்கிறது.

ஒரு குழுமம் என்பது குறிப்பிட்ட பூகோள பரப்பில் அமைந்த ஒரே மாதிரியான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில் நிறுவனங்களின் தொகுப்பாகும். அவை பொதுவான சந்தை, தொழில் நுட்பங்கள், தொழிலாளர் திறன் தேவைகளை பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே மாதிரியான பொருட்களை தயாரிப்பதாகவும் அமையும்.

குழுமங்களின் முக்கிய குணாதிசயங்கள் பின் வருமாறு:

அ) தயாரிப்பு முறை, தரக்கட்டுப்பாடு, பரிசோதனை, சக்தியை பயன்படுத்துதல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவை ஒரே மாதிரியாக இருத்தல்.

ஆ) ஒரே மாதிரியான தொழில் நுட்பம் மற்றும் விற்பனை திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகள்

இ) குழும உறுப்பினர்களுடன் எளிமையான தொடர்பு முறைகள்

ஈ) பொதுவான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கிடையே போட்டித்திறன் மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கான முக்கிய உத்தியாக குழும வளர்ச்சியை மத்திய அரசு கொண்டுள்ளது. குழுமங்களை ஏற்படுத்துவதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான வங்கி மற்றும் நிதி உதவி நிறுவனங்களின் சேவைகளை குறைந்த செலவில் பெறுவதன் மூலம் இச்சேவைகள் இக்குழுமங்களுக்கு சிக்கனமாக கிடைத்திட வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பொதுவான பிரச்சனைகளை அணுகி குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சி மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை ஆதரித்தல், சுயஉதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி பொதுவான ஆதரவு அளித்தல் மற்றும் பொது வசதி மையம் ஏற்படுத்துதல் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு,

கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி முறையை பூர்த்திசெய்தல்) ஆகியவற்றை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் அடைய முடியும்.

குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித்திட்டத்தின் [MSE-CDP] கீழ் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வரும் பொது வசதி மையங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக சிட்கோ நிறுவனம், 09.08.2011 ஆம் நாளிட்ட குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண்.24 ன்படி நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் 53 குழுமங்கள் கண்டறியப் பட்டுள்ளன. இதில் 18 குழுமங்களுக்கு மொத்த திட்ட மதிப்பு ரூபாய் 77.98 கோடியில் மானியமாக ரூ.53.89கோடி மைய அரசால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ.5.76 கோடி மானியம் அளித்துள்ளது. இந்த 18 திட்டங்களில் 7 திட்டங்கள் ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள 11 பொது வசதி மையத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக சுமார் 15,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பது தொடர்பான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

| | |
|---|---|
| மைய அரசு மானியம் | 70 விழுக்காடு<br>(அதிகபட்ச திட்டத் தொகை ரூ.15கோடி) |
| தமிழ்நாடு அரசு மானியம் | 10 விழுக்காடு<br>(அதிகபட்ச மானியம் ரூ.1கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி /<br>வங்கிக் கடன் | 20 விழுக்காடு |

குந்தா தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ 15 கோடி திட்ட மதிப்பில் தேயிலை தொழிலை ஊக்குவிக்க கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், ஒரு பொது வசதி மையத்துடன் கூடிய தேயிலைக் குழுமம் (Tea cluster) உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். தேயிலைத்தூள் கலத்தல், தேயிலைத்தூளை பைகளில் நிரப்பும் வசதி, சேமிப்புக் கிடங்கு, பரிசோதனை மையம் மற்றும் விற்பனை மையம் ஆகியவற்றை கொண்டதாக இந்த பொது வசதி மையம் இருக்கும். இத்திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மாநிலத்தில் குறு,சிறு தொழில் நிறுவனங்கள் குழும வளர்ச்சித் திட்டத்தின் (பொது வசதி மையம்) செயல்பாட்டின் விபரம் கீழ் கண்டவாறு இணைப்புகளில் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | மைய அரசிடமிருந்து முழு ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் | 18 (இணைப்பு –ஆ) |
| ஆ. | மைய அரசினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப் பட்ட திட்டங்கள் | 12 (இணைப்பு – இ) |
| இ. | மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் தயாரிப்பு நிலையில் உள்ள திட்டங்கள் | 23 (இணைப்பு – ஈ) |

### 3.7.2 தமிழ்நாடு அரசின் பகுதி –2 திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசிடமிருந்து இதுவரையில் ரூபாய் 127.50 இலட்சம் கீழ்க்கண்டவாறு மானியமாகப் பெற்றுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த தொழிற் பேட்டை களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட திட்ட மதிப்பீடு | பெறப் பட்ட தமிழ்நாடு அரசின் மானியம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | 2006– 2007 | 3 | 101.50 | 25.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 2 | 2007 –2008 | 3 | 114.00 | 25.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 3 | 2008–2009 | 3 | 120.00 | 20.00 | பணிகள் முடிவடைந்து விட்டன. |
| 4 | 2011 – 2012 | 5 | 150.00 | 30.00 | 4 இடங்களில் பணிகள் முடிவடைந்து விட்டன. ஆர்.கே. பேட்டையில் மட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | 2012 – 2013 | 3 (தூத்துக்குடி கீழநகாச்சி, குடிமங்கலம்) | 110.00 | 27.50 | பணிகள் நடைபெற்று வருகிறன. |
| மொத்தம் | | | 595.50 | 127.50 | |

### 3.8 மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின்

வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் சிட்கோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது.

**2012–13** ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனை, **2013–14** ஆம் நிதியாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ஆகியவை பின்வருமாறு:

| வ. எண் | மூலப் பொருள் | 2012–13 இலக்கு | | 2012–13 சாதனை (மார்ச்–2013 வரை) | | 2013–14 இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ டன்னில்) | மதிப்பு ரூ. (இலட் சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட் சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட் சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 5181.07 | 2239.71 | 3122.43 | 1472.70 | 4700.00 | 2238.00 |
| 2 | பாரபின் மெழுகு | 5300.86 | 4646.30 | 3679.30 | 3631.13 | 5400.00 | 5443.00 |
| 3 | காகிதம் (நேரடி) | 242.09 | 147.00 | 177.02 | 106.95 | 300.00 | 180.00 |
| 4 | காகிதம் (முகவாண்மை) | 494.44 | 269.60 | 874.62 | 499.37 | 1000.00 | 600.00 |
| 5 | பொட்டா சியம் குளோரேட் | 5.00 | 3.34 | 4.00 | 3.73 | 5.00 | 4.80 |
| **மொத்தம்** | | 11223.46 | 7305.95 | 7857.37 | 5713.88 | 11405.00 | 8465.80 |

## 3.9 விற்பனை உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள்/நிறுவனங்களை அணுகி வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல் ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

தரமான பொருட்களை சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் கண்காணித்து வருகிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் **3** விழுக்காடு ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

சிட்கோ நிறுவனம் மார்ச்–2013 வரை ரூபாய் **125.91** இலட்சம் மதிப்பிலான வழங்கல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி இருக்கிறது. கணிசமான முன்னேற்றத்தை அடையும் பொருட்டு **2013–14–**ஆம் ஆண்டிற்கான இலக்கு **ரூ.180.00** இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.10 மின் ஆளுமை

சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகளை சீரமைக்கும் குறிக்கோளுடன் அலுவலக நடைமுறைகளை எளிமையாக்கும் பொருட்டும் மற்றும் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டும் இந்நிறுவனம் அதனுடைய அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கவும் திறம்பட செயலாற்றவும் இயலும். முதற்கட்டமாக தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பப் படிவங்களை சிட்கோ நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் (download) செய்துகொள்ளும் வசதியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்காக எல்காட் நிறுவனத்தின் உதவியுடன், இந்நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளும் பொருட்டு புதிய மென் பொருள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கையாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற்பேட்டைகளும் சீரிய முறையில் பொருளாதார ஆளுமை பெறவும், உரிய உட்கட்டமைப்பு வசதிகள் பெறவும் மற்றும் இவற்றின் தேவைகளை நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டும், உற்பத்தி பொருள்களின் மதிப்பு கூட்டுதல் மற்றும் கழிவிலிருந்து மதிப்புமிக்க பொருட்களைப் பெறுதல் ஆகியவற்றுக்கு வழிவகை செய்ய அனைத்து தொழிற்பேட்டைகளுக்குமான ஓர் பொருளாதாரச் செயல்பாட்டு வரைபடத்தை (Economic Activity Atlas) உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு தொழிற்பேட்டையின் பல்வேறு விவரங்கள் – அதாவது தொழிற்கூடத்தின் பெயர், அதனுடைய செயல்பாடு, அந்நிறுவனம் சார்ந்த சுற்றுச்சுழல் வகைப்பாடு, உற்பத்திசெய்யப்படும் பொருட்களின் விவரம் மற்றும் அந்நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு, பொருட்கள் ஏற்றுமதி பற்றிய விவரங்கள், அந்நிறுவனத்தின் மூலம் உருவாகும் வேலைவாய்ப்பு மற்றும் இதுபோன்ற பல்வேறு விவரங்களையும் இணையதளத்தின் மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

## இணைப்பு–அ

## மாநிலத்தில் செயல்பட்டு வரும் தொழிற் பேட்டைகள்

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் | துவங்கப்பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி (அ) | 1958 | 404.08 |
| 2 | | அரும்பாக்கம் (சி) | 1979 | 3.92 |
| 3 | | வில்லிவாக்கம் (சி) | 1979 | 2.04 |
| 4 | | கொடுங்கையூர்(சி) | 1979 | 7.88 |
| 5 | திருவள்ளூர் | அம்பத்தூர் (அ) | 1963 | 1167.00 |
| 6 | | காக்களூர் (அ) | 1988 | 199.00 |
| 7 | | காக்களூர் (பகுதி 2) (அ) | 2009 | 84.01 |
| 8 | | திருமழிசை (சி) | 1988 | 160.85 |
| 9 | | கும்மிடிபூண்டி (சி) | 1988 | 25.24 |
| 10 | | ஆர்.கே.பேட்டை (சி) | 1996 | 8.15 |
| 11 | | விச்சூர் (சி) | 1994 | 59.16 |
| 12 | | திருமுல்லைவாயல் (ம.தொ.பே.) (சி) | 2001 | 225.80 |
| 13 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் (அ) | 1968 | 37.95 |
| 14 | | மறைமலைநகர் (சி) | 1981 | 39.50 |
| 15 | | ஆலத்தூர் (சி) | 1984 | 150.00 |
| 16 | | திருமுடிவாக்கம் (சி) (ம.தொ.பே. உட்பட) | 1993 | 201.11 |
| 17 | வேலூர் | காட்பாடி (அ) | 1968 | 19.48 |
| 18 | | அரக்கோணம் (அ) | 1968 | 11.09 |
| 19 | | அரக்கோணம் (பகுதி 2) (அ) | 2009 | 40.65 |
| 20 | | ராணிப்பேட்டை (சி) | 1972 | 113.44 |
| 21 | | முகுந்தராயபுரம் (சி) | 1980 | 86.19 |
| 22 | | வன்னிவேடு (சி) | 1987 | 16.44 |
| 23 | | விண்ணமங்கலம் (சி) | 2009 | 10.49 |
| 24 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை (அ) | 1968 | 15.56 |
| 25 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (அ) | 1965 | 41.86 |
| 26 | | ஊத்தங்கரை (சி) | 1995 | 41.28 |
| 27 | | ஒசூர் (சிப்காட்) (சி) | 1976 | 95.15 |
| 28 | | ஒசூர் (புதியது) (சி) | 1999 | 18.80 |

| | | | | |
|---|---|---|---|---|
| 29 | | பர்கூர் (சி) | 1995 | 13.05 |
| 30 | | பர்கூர் (பகுதி 2) (சி) | 2009 | 18.59 |
| 31 | | போலுப்பள்ளி (சி) | 2009 | 60.96 |
| 32 | தருமபுரி | தருமபுரி (அ) | 1965 | 20.28 |
| 33 | | கடகத்தூர் (சி) | 2009 | 7.02 |
| 34 | சேலம் | சேலம் (அ) | 1967 | 19.55 |
| 35 | | மேட்டூர் (அ) | 1967 | 184.38 |
| 36 | | கருப்பூர் (ம.தொ.பே.) (சி) | 2004 | 51.74 |
| 37 | | வீரபாண்டி (சி) | 1993 | 9.79 |
| 38 | நாமக்கல் | நாமக்கல் (சி) | 1977 | 10.09 |
| 39 | | திருச்செங்கோடு (சி) | 1980 | 9.18 |
| 40 | ஈரோடு | ஈரோடு (அ) | 1959 | 25.13 |
| 41 | | நஞ்சை ஊத்துக்குளி (சி) | 1995 | 13.05 |
| 42 | கோயம்புத்தூர் | குறிச்சி (அ) | 1972 | 88.43 |
| 43 | | மலுமிச்சம்பட்டி (சி) | 1994 | 36.14 |
| 44 | திருப்பூர் | கணபதிபாளையம் (சி) | 1993 | 17.10 |
| 45 | | ராசாத்த வலசு (சி) | 2011 | 51.80 |
| 46 | | திருப்பூர் (சி) | 1978 | 10.14 |
| 47 | | குடிமங்கலம் (சி) | 1992 | 6.74 |
| 48 | நீலகிரி | ஊட்டி (சி) | 1981 | 10.65 |
| 49 | கடலூர் | கடலூர் (அ) | 1971 | 15.60 |
| 50 | | வடலூர்(அ) | 1972 | 26.22 |
| 51 | விழுப்புரம் | ஆசனூர் (சி) | 2009 | 107.80 |
| 52 | | வெண்மணி யாத்தூர்(சி) | 2011 | 38.88 |
| 53 | பெரம்பலூர் | எலம்பலூர்(சி) | 2009 | 44.48 |
| 54 | தஞ்சாவூர் | கும்பகோணம் (அ) | 1968 | 32.30 |
| 55 | | தஞ்சாவூர்(அ) | 1968 | 21.94 |
| 56 | | பிள்ளையார்பட்டி (சி) | 1974 | 10.96 |
| 57 | | நாஞ்சிக்கோட்டை (சி) | 1996 | 26.30 |
| 58 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் (அ) | 1966 | 20.97 |
| 59 | | மயிலாடுதுறை (சி) | 2009 | 12.56 |

| | | | | |
|---|---|---|---|---|
| 60 | திருச்சி | துவாக்குடி (அ) | 1974 | 478.38 |
| 61 | | திருவெறும்பூர் (அ) | 1974 | 74.50 |
| 62 | | அரியமங்கலம் (அ) | 1974 | 17.64 |
| 63 | | வாழவந்தான்கோட்டை (ம.தொ.பே.) (சி) | 2003 | 51.70 |
| 64 | | வாழவந்தான்கோட்டை (பகுதி 2) (சி) | 2008 | 87.18 |
| 65 | | வாழவந்தான்கோட்டை (பகுதி 3) (சி) | 2009 | 26.84 |
| 66 | | கும்பக்குடி (சி) | 2009 | 24.46 |
| 67 | கரூர் | கரூர் (அ) | 1974 | 26.63 |
| 68 | | கரூர் ஆத்தூர் (சி) | 1993 | 36.29 |
| 69 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை (அ) | 1974 | 23.18 |
| 70 | | புதுக்கோட்டை (சிப்காட்) (சி) | 1988 | 51.45 |
| 71 | | மாத்தூர் (சி) | 1975 | 26.00 |
| 72 | தேனி | தேனி (அ) | 1963 | 26.59 |
| 73 | | ஆண்டிப்பட்டி (சி) | 1994 | 22.34 |
| 74 | திண்டுக்கல் | திண்டுக்கல் (அ) | 1965 | 39.90 |
| 75 | | வத்தலகுண்டு (அ) | 1965 | 16.26 |
| 76 | மதுரை | மதுரை (கே.புதூர்) (அ) | 1960 | 56.05 |
| 77 | | கப்பலூர் (அ) | 1966 | 534.64 |
| 78 | | கப்பலூர் (ம.தொ.பே) (சி) | 2007 | 18.45 |
| 79 | இராமநாதபுரம் | பரமக்குடி (சி) | 1976 | 10.00 |
| 80 | | கீழநகாச்சி (சி) | 1993 | 10.00 |
| 81 | | உரப்புளி (சி) | 1993 | 12.14 |
| 82 | சிவகங்கை | காரைக்குடி (அ) | 1966 | 180.19 |
| 83 | | சிவகங்கை (அ) | 1966 | 70.61 |
| 84 | | கிருங்காக்கோட்டை (சி) | 1993 | 21.85 |
| 85 | விருதுநகர் | விருதுநகர் (அ) | 1958 | 45.65 |
| 86 | | ராசபாளையம் (சி) | 1995 | 41.13 |
| 87 | திருநெல்வேலி | பேட்டை (அ) | 1959 | 50.55 |
| 88 | | கடையநல்லூர் (சி) | 1992 | 10.00 |
| 89 | | வள்ளியூர் (சி) | 2005 | 16.75 |
| 90 | | வள்ளியூர் (பகுதி 2) (சி) | 2010 | 23.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| 91 | தூத்துக்குடி | கோவில்பட்டி (அ) | 1962 | 85.54 |
| 92 | | தூத்துக்குடி (சி) | 1988 | 24.18 |
| 93 | கன்னியாகுமரி | கோணம் (அ) | 1964 | 20.70 |
| 94 | | மார்த்தாண்டம் (அ) | 1964 | 7.50 |
| | | மொத்தம் | | 6576.37 |

(அ) – அரசு தொழிற் பேட்டைகள் (சி) – சிட்கோ தொழிற் பேட்டைகள் (ம.தொ.பே) மகளிர் தொழிற்பேட்டைகள்

## அட்டவணை –ஆ

**குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள்**

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எ ண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவ்வரிசி குழுமம், சேலம். | 92.06 | 73.31 | 0.00 | 18.75 | 0.00 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 2 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர். | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கோவில் பட்டி | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டச் செயலாக்கம் முடிவுற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 8 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம் புத்தூர், | 288.20 | 99.00 | 16.52 | 172.68 | 0.00 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. |
| 9 | செங்கல் சூளை குழுமம், திருநெல் வேலி. | 227.27 | 122.73 | 22.72 | 29.55 | 52.27 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன |
| 10 | பீங்கான் குழுமம், விருதாச் சலம். | 73.10 | 43.86 | மாநில அரசு தொழிற் கூடம் வழங்கியுள்ளது | 18.45 | 10.79 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன |
| 11 | கயிறு குழுமம், சிவகங்கை. | 658.90 | 500.01 | 65.89 | 93.00 | 0.00 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை | 927.08 | 616.39 | 97.21 | 109.35 | 104.13 | குழுமப்பணிகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன |
| 13 | அச்சுக் குழுமம், சிவகாசி. | 1096.90 | 767.81 | 90.66 | 120.92 | 117.48 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகி ன்றன |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர். | 690.58 | 466.03 | 69.05 | 145.50 | 10.00 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகி ன்றன |
| 15 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஒசூர். | 690.94 | 439.89 | 70.75 | 105.30 | 75.00 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகி ன்றன |
| 16 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 1072.52 | 964.14 | 0.00 | 108.38 | 0.00 | குழுமப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படுகி ன்றன |
| 17 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 787.00 | 550.25 | 78.91 | 83.75 | 74.09 | மைய அரசின் முழு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது |
| 18 | ஜவ்வரிசி குழுமம், சேலம். பகுதி 2 | 255.35 | 229.82 | 0.00 | 25.53 | 0.00 | மைய அரசின் முழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது |
| | மொத்தம் | 7795.90 | 5386.48 | 576.09 | 1181.16 | 652.14 | |

# அட்டவணை –இ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்)
## மத்தியஅரசின் கொள்கைஅளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரிசி ஆலைக் குழுமம் தஞ்சாவூர் | 244.66 | 132.83 | 40.43 | 21.40 | 50.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 2 | பொறியியல் குழுமம், திண்டுக்கல் | 971.29 | 651.34 | 97.13 | 132.82 | 90.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 3 | ரீப்ராக்டரி குழுமம் விருதாச் சலம் | 898.53 | 573.51 | 89.85 | 135.17 | 100.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 4 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பக் கோணம் | 126.52 | 99.05 | 7.90 | 19.57 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 5 | அரிசி மில் குழுமம் காங்கேயம் | 750.53 | 525.37 | 75.05 | 95.11 | 55.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 6 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 233.39 | 133.47 | 23.34 | 37.58 | 39.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 7 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ், சேலம் | 1532.74 | 1277.71 | 0.00 | 255.03 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 8 | பொறியியல் குழுமம், அம்பத்தூர் | 1124.42 | 805.33 | 54.44 | 114.65 | 150.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 9 | தங்க நகை குழுமம், மதுரை | 361.48 | 260.8s2 | 29.14 | 39.92 | 31.60 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 10 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் | 296.92 | 209.98 | 29.69 | 57.25 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 11 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம். | 1497.00 | 1032.00 | 110.50 | 167.70 | 186.80 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| 12 | ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய் புரம் | 93.57 | 74.28 | 9.36 | 9.93 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. |
| | மொத்தம் | 8131.05 | 5775.69 | 566.83 | 1086.13 | 702.40 | |

அட்டவணை – ஈ

குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்)

மத்திய அரசுக்கு அனுப்பபட்ட மற்றும் தயாரித்தல் நிலைகளில் உள்ள திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிமெண்ட் குழாய் குழுமம், சின்ன தாராபுரம் | 1010.00 | 643.00 | 337.00 | 30.00 | 0.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு, ஆணை எதிர்ப் பார்க்கப் படுகிறது. |
| 2 | ஆயத்த ஆடை குழுமம், தளவாய்புரம் | 1363.70 | 991.37 | 99.00 | 137.91 | 135.42 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு , ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 3 | கயிறு குழுமம், பொள்ளாச்சி | 1067.89 | 736.93 | 100.00 | 110.96 | 120.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 4 | அட்டைப் பெட்டி குழுமம், திருவள்ளூர் | 1884.35 | 1050.00 | 100.00 | 534.35 | 200.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் (பகுதி–2) | 135.76 | 105.09 | 0.00 | 13.87 | 16.80 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், ஒ.மேட்டுப் பட்டி | 360.50 | 218.25 | 36.00 | 42.50 | 63.75 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 7 | அரிசி ஆலைக் குழுமம், திருச்செந்தூர் | 1070.00 | 711.60 | 100.00 | 135.00 | 123.40 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 8 | தங்க நகை குழுமம், திருச்சி | 365.80 | 292.84 | 36.58 | 0.00 | 36.58 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 9 | அச்சுக் குழுமம், சேலம் | 1450.00 | 1250.00 | 0.00 | 0.00 | 200.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஆணை எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 10 | பொறியியல் குழுமம், பெருங்குடி | 77.00 | 59.60 | 7.45 | 4.45 | 5.50 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 11 | பிளாஸ்டிக் குழுமம், மதுரை | 524.42 | 342.96 | 33.11 | 75.00 | 73.35 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 12 | சென்னை பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 1485.12 | 1026.96 | 100.00 | 100.00 | 258.16 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 13 | கனரக வாகன கட்டமைப்பு குழுமம், நாமக்கல் | 1473.61 | 1107.29 | 98.53 | 232.79 | 35.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 14 | மைக்கால் ஃபார்மா, குழுமம், சென்னை | 342.63 | 266.11 | 34.26 | 42.26 | 0.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | மின் பொருள் குழுமம், கோயம்புத்தூர். | 1482.00 | 1037.40 | 100.00 | 197.16 | 147.44 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 16 | விசைத்தறி குழுமம், இராசிபுரம். | 550.54 | 371.86 | 45.51 | 59.12 | 74.05 | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 17 | முந்திரி குழுமம், கன்னியா குமரி | 1486.95 | 1277.16 | 61.09 | 148.69 | 0.00 | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 18 | ஃபார்மா இந்தியன் சிஸ்டம்ஸ்ஆப் மெடிசன், குழுமம், காவாங்கரை | **47.40** | **35.80** | **4.54** | **7.06** | **0.00** | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 19 | கயிறு குழுமம், ஈரோடு | 600.00 | 411.93 | 48.65 | 79.42 | 60.00 | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 20 | மருந்துக் குழுமம், ஆலத்தூர் | * | | | | | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 21 | ஆயத்த ஆடைக் குழுமம், தூத்துக்குடி | * | | | | | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 22 | ரப்பர் குழுமம், மதுரை | * | | | | | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |
| 23 | தேயிலைக் குழுமம், மேட்டுப் பாளையம் | 1500.00 * | 1100.00 | 100.00 | 300.00 | 0.00 | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |

*திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. சரியான திட்ட மதிப்பீடு, திட்ட அறிக்கை பெற்றவுடன் தெரியவரும்